FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364120 09/DC/2026/TVL

1. District : Thiruvallur PS: VAC Year: 2026 FIR No.: Date: 04.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Act 1988, as amended by Sections பிரிவுகள்: 7(a),
(iii) Act சட்டம்: the Prevention of corruption (Amendment) Act 2013. Sections பிரிவுகள்: 12 (a) 7(a)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 03.07.2026 to : 03.07.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 16.45 hrs நாள் வரை 23.45 hrs
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 04.07.2026 Time : 04.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 04.07.2026 Time : 02.00 hrs & 15.00 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 42 km, Northwest.
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : O/o the Municipality, Tiruttani.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. C. Manikandan (b) Father's/ ~~Husband~~'s Name : Chinnappan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Deputy Tahsildar
தொழில்

(g) Address : Deputy Tahsildar (Election), Tiruttani Tk, Thiruvallur Dt, I/c District Inspection cell officer, Thiruvallur Dt.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Enclosed separately.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— NIL —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

மணிகண்டி அறிவுப்பாளர் :-
இன்று 04.07.2016 ஆம் ஒரு மதியம் 15.00 மணிக்கு,
S. மாலா, காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது,
தலை. ட. ஆகியோர், தலை காவல் கண்காணிப்பாளர், தொ.ந.க. பிரிவு
திருவள்ளூர் அவர்கள் மாவட்ட உத்தரவின் பேரில் தலை.ட. மணிகண்டன்,
தலை வட்டமையின் (தோர்தல்) வட்டாட்சியர் அவர்களும், தலைமை
தலைவர்களும் உட மாவட்ட தலை அலுவலக அலுவர், தலைவர்கள்
அவர்கள் மாமந்த புகார் மீது விசாரணை பதிவு செய்த விபரம்
பின்வருமாறு,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

S. மாலா 04/07/2016

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04.07.2016.

Name: பெயர் S. Mala,
Rank: நிலை Sub Inspector No. எண் Police,
WAC, Thiruvallur.

காலம் 7 ல் கண்டவாறு குற்றம் சாட்டபட்டவர்களின் விவரம்

A1	B.கன்னியப்பன், வயது-41, த/பெ. பாலகிருஷ்ணன், திருத்தணி நகராட்சி ஆணையர், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்.
A2	திரு.D.நரசிம்மன், வருவாய் ஆய்வாளர், திருத்தணி நகராட்சி ஆணையர், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்.
A3	திரு.K.நாகராஜ், பொது பணி மேற்பார்வையாளர், திருத்தணி நகராட்சி ஆணையர், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்.
A4	திரு.S.தினேஷ்குமார், வயது-33, த/பெ.குருமூர்த்தி, எண்.259, கணேசபுரம், வியாசபுரம் போஸ்ட், திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்
A5	திரு.S.துரைராஜ், வயது-59, த/பெ.சுப்பிரமணி, எண்.66/44, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்

அனுப்புநர் திரு.C.மணிகண்டன், துணை வட்டாட்சியர் (தேர்தல்), வட்டாட்சியர் அலுவலகம், திருத்தணி, திருவள்ளூர்/மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), திருவள்ளூர். **பெறுநர்** காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு,ஏ திருவள்ளூர். **ந.க.எண்.13187/2026/அ3, நாள்.** 04.07.2026, பொருள்:- திடீர் ஆய்வு - திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சி அலுவலகம் - திடீர் கூட்டுத்தணிக்கை ஊழல்

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை துணை கண்காணிப்பாளர் திருவள்ளூர் அவர்களுடன் மேற்கொண்டது- நடவடிக்கை கோரி கடிதம் கொடுப்பது - தொடர்பாக. பார்வை:-எனது செயல்முறைகள் ந.க.எண்.320/2025/11. நாள்.03.07.2026 கடித்தத்தின்படி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13187/2026/அ3, நாள்.03.07.2026, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் வரும் பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மூலம் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் கையூட்டாக பணம் பெற்று வருவதாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் அவர்களுக்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில், கூட்டு தணிக்கை மேற்கொள்வதற்காக அவர்களுடைய ந.க.எண்.320/2025/11. நாள்.03.07.2026 கடித்தத்தின்படி திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13187/2026/அ3, நாள்.03.07.2026-ன்படி கூட்டு தணிக்கை ஆய்வு மேற்கொள்வதற்காக திரு.C.மணிகண்டன், துணை வட்டாட்சியர் (தேர்தல்), வட்டாட்சியர் அலுவலகம், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம் ஆகிய என்னை கூட்டு தணிக்கை செய்ய நியமனம் செய்து உத்தரவு கொடுக்கப்பட்டதின்பேரில்,இன்று 03.07.2026-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் இருத்துறை திடீர் கூட்டுத்தணிக்கைச் செய்ய நான் மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.R.ஜெயக்குமார், காவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.மாலா மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு மாலை சுமார் 16.45 மணி சுமார் 23.45 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் கூட்டுச்சோதனையின்போது அலுவலகத்தில் உள்ளே இருந்த திரு.துரைராஜ் என்பவரிடமிருந்து ரூ.67,000/- லஞ்சமாக பெறப்பட்ட பணம் என கருதுவதற்கு போது முகாந்திரம் இருந்தமையால் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக, திரு.துரைராஜ், திரு.தினேஷ்குமார் மற்றும் திரு.நரசிம்மன், வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும், திரு.தினேஷ்குமார் மற்றும் திரு.நரசிம்மன், வருவாய் ஆய்வாளர் ஆகியோர் அவர்களது விளகத்தினை கைப்பட விளக்கத்தை எழுதிக்கொடுத்தனர். மேலும், பணியில் இருந்த தனிநபர் 1) திருமதி.S.ராகினி,

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

2) திரு.P.G.சரவணன், 3)திரு.S.கார்த்திக் ஆகியோர் அவர்களது விளகத்தினை கைப்பட விளக்கத்தை எழுதிக்கொடுத்தனர்.மேலும் சோதனையின்போது லஞ்சமாக பெறப்பட்ட பணம் என கருதுவதற்கு உரிய முகாந்திரம் இருந்ததால் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.67,000/- (134x500) - ஐ நடவடிக்கை மேற்கொள்ள தங்களிடம் ஒப்படைக்கிறேன். திரு.C.மணிகண்டன்,துணை வட்டாட்சியர் (தேர்தல்),வட்டாட்சியர் அலுவலகம், திருத்தணி,திருவள்ளூர்/மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொறுப்பு),திருவள்ளூர். இணைப்பு - 1) திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண.13187/2026/அ3, நாள்.03.07.2026. நகல். 2)சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பணம் **ரூ.67,000/-**(அறுபத்து ஏழாயிரம் ரூபாய்) 3)செயல்முறை ஆணை அசல்.4)கைப்பட எழுதிக்கொடுத்த விளக்கக்கடிதங்கள்-5, 5)மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள்-3 மற்றும் 6) அலுவலகத்தின் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களின் சான்றொப்பமிட்ட நகல்கள். அதில் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.கு.ஜெயக்குமார் அவர்களால் வழக்கு பதிவு செய்ய எனக்கு உத்தரவிடப்பட்டு கையொப்பம் செய்யப்பட்டுள்ளது. மேலும் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சி அலுவலகம் - திடீர் கூட்டுத்தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறையின் விபரம் பின்வருமாறு, **இரு துறை திடீர் கூட்டாய்வு குறித்த செயல்முறைகள்.முன்னிலை:- திரு.C.மணிகண்டன்,நாள்:-03.07.2026.** பொருள்:- திடீர் கூட்டாய்வு- திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு- திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சி அலுவலகம், திருத்தணி - 03.07.2026-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது- தொடர்பான- செயல்முறைகள். **ஆணை:-** திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் வரும் பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மூலம் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் கையூட்டாக பணம் பெற்று வருவதாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் அவர்களுக்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில், கூட்டு தணிக்கை

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

மேற்கொள்வதற்காக அவர்களுடையந.க.எண்.320/2025/11. நாள்.03.07.2026 கடித்தத்தின்படி திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13187/2026/அ3, நாள்.03.07.2026-ன்படி கூட்டு தணிக்கை ஆய்வு மேற்கொள்வதற்காக திரு.C.மணிகண்டன், துணை வட்டாட்சியர் (தேர்தல்), வட்டாட்சியர் அலுவலகம், திருத்தணி,திருவள்ளூர் மாவட்டம் ஆகிய என்னை கூட்டு தணிக்கை செய்ய நியமனம் செய்து உத்தரவு கொடுக்கப்பட்டதின்பேரில், இன்று 03.07.2026-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் இருத்துறை திடீர் கூட்டுத்தணிக்கைச் செய்ய நான் மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.R.ஜெயக்குமார், காவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.மாலா மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.இன்று 03.07.2026-ந்தேதி மாலை சுமார் 14.30 மணிக்கு திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து அரசு வாகனத்தில் புறப்பட்டு மாலை சுமார் 16.00 மணிக்கு திருத்தணி பேருந்து நிலையம் பின்புறம் அமைந்துள்ள திருத்தணி நகராட்சி அலுவலகத்திற்கு அருகில் வந்து வாகனங்கத்தை நிறுத்திவிட்டு இறங்கி நடந்து சென்று, ஆங்காங்கே குழுவினருடன் திருத்தணி நகராட்சி அலுவலகத்தை கண்காணித்துக்கொண்டிருந்தபோது, மேற்படி திருத்தணி நகராட்சி அலுவலகத்தில்பொதுமக்கள் உள்ளே சென்று வேலைகளை முடித்து அலுவலகத்திற்கு சென்று வருவதும் போவதுமாக இருந்தார்கள். அப்போது மாலை சுமார் 16.00மணியளவில் திருத்தணி நகராட்சி அலுவலகத்திற்குள்ளே குழுவினருடன் சென்றபோது, அலுவலகத்தின் வெளியே வாராண்டாவில் நின்றுக்கொண்டிருந்த பொதுமக்களையும், சிலர் விஜிலென்ஸ் போலீஸார் என அடையாளம் தெரிந்து வெளியே ஓட முயற்சி செய்தவர்களையும் உள்ளே அழைத்துவந்து, நகராட்சி அலுவலகத்தில் இருந்த நாற்காலிகளில் அமரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர்கள் அனைவரையும் குழுவினர் உதவியுடன்இருக்கையில் அமரசெய்தோம். பின்னர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் ஆணையர் அறைக்கு சென்று பார்த்தபோது ஆணையர் மதிய சாப்பாடு சாப்பிட்டுவர வெளியே சென்று சென்றுள்ளதாக அங்கிருந்த ஆணையர் அவர்களின் உதவியாளர் தெரிவித்தார். பின்னர், அவரது தொலைபேசி எண்ணை வாங்கி, அவருக்கு தகவல் தெரிவித்து உடனே

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

திருத்தணி நகராட்சி அலுவலகத்திற்கு வருமாறு தெரிவிக்கப்பட்டது. பின்னர், அலுவலகத்தில் இருந்த பொதுமக்களை ஒரு கேபினின் ஒரு பக்கமாக இருக்குமாறும் மற்றும் அலுவலக பணியாளர்கள் ஒன்று திரட்டி ஒரு கேபினின் ஓன்றாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டது. பின்னர் சுமார் 16.45 மணியளவில் ஆணையர் அவர்கள் நகராட்சி அலுவலகத்திற்கு வந்தவரிடம் என்னை அறிமுகம் செய்துக்கொண்டு, என்னுடன் வந்திருந்த காவல் துணைக் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரை அறிமுகம் செய்து வைத்து அவர்களுடைய அடையாள அட்டையை காட்டியும், சுய பரிசோதனை செய்து காட்டியும், மேற்படி அலுவலகத்தை கூட்டுத் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தெரிவித்து ஒத்துழைப்பு கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.திருத்தணி நகராட்சி ஆணையர் அவர்களைப்பற்றி விசாரிக்க அவர் தன்னுடைய பெயர்B.கன்னியப்பன், வயது-41, த/பெ.பாலகிருஷ்ணன் என்றும் அவர் திருத்தணி நகராட்சியில் ஆணையராக 11.03.2026 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். தான் எண்.212, பொன்னேரிகுட்டை தெரு, மதுரமங்களம் கிராமம் &போஸ்ட், காஞ்சிபுரம் மாவட்டம் என்ற முகவரியில் குடும்பத்துடன் வசித்துவருவதாகவும்,அலுவலகத்தை சோதனை செய்ய ஆட்சேபனை ஏதுமில்லை என தெரிவித்தார்.பின்னர் அலுவலகத்தில் வாராண்டாவில் நின்று கொண்டிருந்த பணியாளர்கள் மற்றும் அமரவைக்கப்பட்டிருந்த தனிநபர்களை விசாரணை செய்தவிவரம் கீழ்க்கண்டவாறு:-

நகராட்சி அலுவலகத்தில் பொது பிரிவு கேபினில் இருந்த பணியாளர்களின் விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.M.செல்வகுமார். மேலாளர், திருத்தணி நகராட்சி, திருத்தணி.	ரூ.1,400/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு.S.ஜெய்சங்கர், கணக்கர்,	ரூ.500/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

3.	திரு.S.ஜெகநாதன், உதவியாளர்,	ரூ.550/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
4.	திரு.M.J.மீனாட்சி, உதவியாளர்,	ரூ.20/-	--
5.	திரு.G.டில்லி, இளநிலை உதவியாளர்	ரூ.2,400/-	அரிசி வாங்குவதற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
6.	திரு.N.லெனின், இளநிலை உதவியாளர்	--	--
7.	திரு.V.இலக்கியராசா, இளநிலை உதவியாளர்	ரூ.1,750/-	கடனுக்கு வட்டி கட்ட பணம் எடுத்து வந்ததாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
8.	திரு.A.ராஜசேகர், பதிவறை எழுத்தர்,	ரூ.510/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
9.	திரு.R.சசிக்குமார், அலுவலக உதவியாளர்,	ரூ.200/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
10.	திரு.N.நாகேந்திரகுமார், இரவு காவலர் / அலுவலக உதவியாளர்	--	--

நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவு அறையில் இருந்த பணியாளர்களின் விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.V.விஜய், உதவி பொறியாளர்,	--	--
2.	திரு.K.நாகராஜ், பொது பணி மேற்பார்வையாளர்,	ரூ.2,500/-	அம்மாவிற்கு மாத்திரை வாங்குவதற்காக பணம் கொண்டு வந்ததாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

3.	செல்வி.M.மணமல்லி, பணி ஆய்வாளர்,	ரூ.450/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
4.	திரு.K.C.விமலேஷ், பணி ஆய்வாளர்,	ரூ.250/-	பெட்ரோல் செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
5.	திரு.V.ஜெய்கணேஷ், பணி ஆய்வாளர்,	ரூ.650/-	சாப்பாட்டு செலவிற்காக, பெட்ரோல் போடுவதற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
6.	திரு.A.பாஸ்கரன், பிட்டர்,	ரூ.400/-	சாப்பாட்டு செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
7.	திரு.A.ரவி, ஓட்டுநர்.	ரூ.700/-	பெட்ரோல் செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நகராட்சி அலுவலகத்தில் வருவாய் பிரிவு அறையில் இருந்த பணியாளர்களின் விவரம்:-

வ எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.D.நரசிம்மன், வருவாய் ஆய்வாளர்,	ரூ,100/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு.S.விஜயகுமார், வருவாய் உதவியாளர்	ரூ.500/-	மதிய சாப்பாடு செலவிற்காக, பெட்ரோல் போடுவதற்கும் வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.L.காமேஷ், வருவாய் உதவியாளர்	ரூ.100/-	மதிய சாப்பாடு செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

நகராட்சி அலுவலகத்தில் நகரமைப்பு பிரிவு அறையில் இருந்த பணியாளர்களின் விவரம்:-

வ எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திருமதி.S.ரேவதி, க/பெ.பூபாலன், எண்.307, TNHB. காக்களூர் கிராமம், திருவள்ளூர். (7639112288)	ரூ,240/-	இவர் மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அலுவலகம் மூலம் ஒப்பந்த பணியாக மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியினை செய்து வருவதாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணத்தை சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதார பிரிவு அறையில் இருந்த பணியாளர்களின் விவரம்:-

வ எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.M.ரவிச்சந்திரன், சுகாதார ஆய்வாளர்.	ரூ.1,000/-	சாப்பாட்டு செலவிற்காகவும், பெட்ரோல் போடுவதற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு.K.S.லோகநாதன், சுகாதார மேற்பார்வையாளர்,	--	--
3.	திருமதி.K.நரசா,வயது-41, க/பெ. காமேஷ்குமார், எண்.6/25, அண்ணா நகர், டிப்போ பின்புறம், திருத்தணி. (8610980534)	--	தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பரப்புரையாளராக ஒப்பந்த பணியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார்.
4.	திருமதி.S.ப்ரித்தி, வயது-33, க/பெ.சரவணன், மினி கோல்டன் தியேட்டர், குறுக்கு தெரு, திருத்தணி (8344144063)	--	தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பரப்புரையாளராக ஒப்பந்த பணியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார்.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

5.	திருமதி.K.ஜோதி, வயது-45 க/பெ.ராஜேந்திரன், எண்.4, அக்கையா தெரு, திருத்தணி. (7845582650)	ரூ.680/-	தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பரப்புரையாளராக ஒப்பந்த பணியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். வீட்டு செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
6.	திரு.M.பாலாஜி, வயது-35, த/பெ. முனிவேல், எண்.66, வேலு நகர், 3வது தெரு, திருத்தணி.	--	தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பரப்புரையாளராக ஒப்பந்த பணியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார்.
7.	திரு.A.தணிகாச்சலம், தூய்மை பணியாளர்,	ரூ.300/-	சாப்பாட்டு செலவிற்காகவும், பெட்ரோல் போடுவதற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நகராட்சி அலுவலகத்தில் ஆதார் சேவை மையத்தில் இருந்தவர்கள் விவரம்:-

வ எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.S.ராஜீ, வயது-34, த/பெ.சுப்பிரமணி, எண்.124, ஓச்சேரி ரோடு தெரு, மேல்பாக்கம் கிராமம் அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம். (9994326903)	ரூ.1,300/-	திருத்தணி நகராட்சியில் அமைந்துள்ள ஆதார் சேவை மையத்தில் Computer Operator ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். தான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் உத்தரவின்பேரில் திரு.செந்தமிழ் என்பவரின் உத்தரவின்பேரில் கடந்த 10 ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதாகவும், தனக்குறிய சம்பளம் ரூ.11,600/- எல்காட் நிறுவனம் மூலம் கொடுப்பதாக தெரிவித்தார். மேலும், தன்னிடம் இருந்த ரூ.300/- ஆதார்கார்டு அப்டேசன் பெறப்பட்ட கட்டணம் என்றும், எல்காட் வங்கி கணக்கில் செலுத்த வேண்டி உள்ளது என்றும், ரூ.1000/- எனது சொந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

நகராட்சி அலுவலகத்தில் பணியில் இருந்த தனிநபர்கள் விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திருமதி.S.ராகினி, வயது-47, க/பெ.சேகர். எண்.6, கலைஞர் நகர், முதல் தெரு, திருத்தணி (9994742545)	ரூ.200/-	திருத்தணி நகராட்சியில் ஆணையரின் உத்தரவின்பேரில் பொதுப்பிரிவில் Typist ஆக கடந்த 10 ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதாகவும், தனக்குறிய சம்பளம் ரூ.12,500/- பொறியாளர் பிரிவு அதிகாரிகள் கொடுப்பதாக தெரிவித்தார். மேலும், பணத்தை சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு.P.G.சரவணன், வயது-39, த/பெ.கணேசன், எண்.139, மடம் தெரு, பொதட்டூர்பேட்டை, பள்ளிப்பட்டு தாலுக்கா திருவள்ளூர் மாவட்டம் (9786335250)	ரூ.550/-	திருத்தணி நகராட்சியில் ஆணையரின் உத்தரவின்பேரில் வருவாய் பிரிவில் Typist ஆக கடந்த 6 ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதாகவும், தனக்குறிய சம்பளம் ரூ.12,500/- பொறியாளர் பிரிவு அதிகாரிகள் கொடுப்பதாக தெரிவித்தார். மேலும், பணத்தை சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.S.கார்த்திக், வயது-32, த/பெ.சுப்பிரமணி, எண்.7, 2வது தெரு, முருகப்பா நகர் திருத்தணி. (9994111498)	ரூ.400/-	திருத்தணி நகராட்சியில் ஆணையரின் உத்தரவின்பேரில் பொறியாளர் பிரிவில் Temperery Technical Assistant ஆக கடந்த 12 ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதாகவும், தனக்குறிய சம்பளம் ரூ.25,000/- குமார் என்கின்ற Labour ஒப்பந்ததாரர் மூலம் கொடுப்பதாக தெரிவித்தார். மேலும், பணத்தை சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

4.	திரு,S.தினேஷ்குமார், வயது-33, த/பெ.குருமூர்த்தி, எண்.259, கணேசபுரம், வியாசபுரம் போஸ்ட், திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் (8608535371)	ரூ.2,320/-	திருத்தணி நகராட்சியில் ஆணையரின் உத்தரவின்பேரில் பொறியாளர் பிரிவில் Temperery Technical Assistant ஆக கடந்த 4 ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதாகவும், தனக்குறிய சம்பளம் ரூ.25,000/- குமார் என்கின்ற Labour ஒப்பந்ததாரர் மூலம் கொடுப்பதாக தெரிவித்தார். மேலும், பணத்தை சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் திருத்தணி நகராட்சியில் தட்டச்சராகவும், Technical Assistant ஆக பணிபுரியும் தனிநபர் ஆவார்கள். மேற்படி நபர்களை விசாரணை செய்து அவர்களுடைய விளக்கத்தினை கைப்பட எழுதிப்பெறப்பட்டது. மேற்படி நபர்கள் பணிபுரிவது குறித்து நகராட்சி ஆணையரிடம் .விளக்கம் கேட்டபோது, திருத்தணி நகராட்சியில் உள்ள இரண்டு நீரேற்றும் நிலையங்கள் மற்றும் மேல்நிலைய நீர்தொட்டிகள் இயக்குவது தொடர்பான பணிகள் அனைத்தும் தனியார் நபர்கள் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்படுவதாகவும், அந்த பட்டியலில் மேற்படி நபர்கள் Typist ஆக உள்ள திருமதி.ராகினி மற்றும் திரு.சரணவன், Technical Assistant ஆக உள்ள திரு.கார்த்திக் மற்றும் திரு.தினேஷ்குமார் ஆகியோர்கள் மற்றும் அறிவுசார் மையத்திற்குரிய இரவு காவலரும் அதில் இணைக்கப்பட்டு, நகராட்சி அலுவலக பணிகள் மேற்கொள்ளபடுவதாக தெரிவித்தார்.

நகராட்சி அலுவலகத்தில் இருந்த பொதுமக்கள் விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.S.தினேஷ்குமார், வயது-34, த/பெ.சிவலிங்கம், தணிகை இல்லம், திருத்தணி (7708829246)	ரூ.100/-	திருத்தணி நகராட்சியில் புதிய பேருந்து நிலைய பணிகளை ஒப்பந்த பணி எடுத்து செய்துவரும் தாமோதரன் அவர்களிடம் Supervisor ஆக பணிபுரிந்து வருவதாகவும், புதிய பேருந்து நிலையத்திற்கு பின்புறம் பார்கிங் ஏரியாவுக்கு செட் அமைப்பது தொடர்பான வேலைக்காக பணிமேற்பார்வையாளரை சந்திப்பதற்காக வந்ததாக தெரிவித்தார். தன்னிடம் இருந்த பணம் சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

2.	திரு.K.ஆறுமுகம், வயது-55, த/பெ.கந்தசாமி, எண்.5, ஜோதி நகர், திருத்தணி. (9444242256)	ரூ.1,000/-	தன்னுடைய மனைவி திருமதி.சண்முகவள்ளி அவர்கள் திருத்தணி வார்டு-16-ல் நகர்மன்ற உறுப்பினராக உள்ளதாகவும், தான் திருத்தணி நகராட்சியில் ஜோதி நகரில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு மதில் சுவர் அமைப்பதற்கான பணி குமார் என்ற ஒப்பந்ததாரருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அதனை தான் Sub-Contract பெற்று அந்த பணியினை தான் செய்யவுள்ளதாகவும், மேற்படி வேலையை தொடங்குவதற்காக மேற்படி இடத்தை சர்வே செய்து தருவதற்காக சர்வேயரை பார்க்க வந்ததாகவும், தன்னிடம் இருந்த பணம் மாத்திரை வாங்குவதற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நகராட்சி அலுவலகத்தில் உள்ளே இருந்த திரு.S.துரைராஜ், வயது-59, த/பெ.சுப்பிரமணி, எண்.66/44, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ரூ.67.700/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரணை செய்தபோது, அந்த பணம்தன்னுடைய பணம் ரூ.700/- என்றும், ரூ.67,000/- பணம் திருத்தணி பெருந்தலைவர் காமராஜர் நாலங்கடி கடை எண்.12-ல் மண்பாண்டம் பொருட்களை விற்கும் திரு.சிவலிங்கம் என்பவர் கட்ட வேண்டிய வரி பணத்தை கட்ட சொல்லி கொடுத்ததாக தெரிவித்தார். திரு.சிவலிங்கம் அவர்களுடைய தொலைபேசி எண்ணிற்கு (9698738402) தொடர்பு கொண்டு விசாரணை செய்தபோது, அவர் வரி பணத்தினை கட்டச்சொல்லி யாரிடமும் பணம் கொடுக்கவில்லை என தெரிவித்தார். அதன்பின்னர், துரைராஜ் அவர்கள் மேற்படி பணத்தில் ரூ.25,000/- பொறியியல் பிரிவில் வேலை செய்யும் திரு.தினேஷ்குமார் என்பவர் பணிமேற்பார்வையாளர் திரு.நாகராஜன் என்பவரிடம் கொடுக்கச்சொல்லி கொடுத்ததாகவும், ரூ.42,000/- வருவாய் ஆய்வாளர் திரு.நரசிம்மன் அவர்கள் விஜிலென்ஸ் போலீசார் சோதனை செய்ய வந்துள்ளது தெரிந்ததும், தன்னிடம் கொடுத்து வைத்துக்கொள் பிறகு வாங்கிக்கொள்கிறேன் என்று தெரிவித்ததாகவும் தெரிவித்தார். அதன்படி திரு.தினேஷ்குமார் என்பவரை விசாரணை செய்தபோது, பொறியியல்

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

பிரிவில் Technical Assistant (தனிநபர்) பணிபுரிந்து வருவதாகவும், இன்று காலை அலுவலகம் வரும்போது, வீட்டிலிருந்து கொண்டுவந்த பணம் என்றும், விஜிலென்ஸ் போலீசார் சோதனை செய்ய வந்துள்ளது தெரிந்ததும், பதட்டத்தில், துரைராஜ் அவர்களிடம் கொடுத்து வைத்துக்கொள்ள சொன்னதாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளகூடியதாக இல்லை. மேலும், வருவாய் ஆய்வாளர் திரு.நரசிம்மமன் அவர்களை விசாரணை செய்தபோது, இன்று மாலை சுமார் 04.00 மணியளவில் வருவாய் பிரிவில் பணியில் இருந்தபோது, அலுவலகத்திற்கு விஜிலென்ஸ் போலிசார் சோதனை செய்ய வந்துள்ளது தெரிந்து, தன்னிடம் இருந்த ரூ.42,000/-த்தை நகராட்சியல் கேட் வாட்ச்மேனாக பணிபுரியும் திரு.துரைராஜ் அவர்களிடம் பதட்டத்தின் காரணமாக வைத்துக்கொள்ளுமாறு கொடுத்ததாகவும், தான் துரைராஜிடம் கொடுத்தபணம் குத்தகை இனங்களுக்கு செலுத்துவதற்காக வசூலித்து வந்த பணம் என தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால், அந்த பணம் லஞ்சமாக பெறப்பட்ட பணம் என கருதி, துரைராஜ் அவர்களிடம் இருந்த பணம் ரூ.67,000/-(134 x 500 Currency) வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. ரூ.700/- திரு.துரைராஜ் அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திரு.துரைராஜ், வருவாய் ஆய்வாளர் திரு.நரசிம்மன் மற்றும் திரு.தினேஷ்குமார் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும், வருவாய் ஆய்வாளர் திரு.நரசிம்மன் மற்றும் திரு.தினேஷ்குமார் ஆகியோர் அவர்களது விளக்கத்தை கைப்பட எழுதி கொடுத்தார்கள். மேலும், விசாரணைக்காக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகைபதிவேடு 1)பொதுப்பிரிவு (1முதல் 8 பக்கங்கள்), 2)பொறியியல் பிரிவு (1முதல் 6 பக்கங்கள்), 3)வருவாய் பிரிவு (1முதல் 4 பக்கங்கள்), 4)நகரமைப்பு பிரிவு (1முதல் 4 பக்கங்கள்)5)பொது சுகாதார பிரிவு (1முதல் 6 பக்கங்கள்),6)SBM பணியாளர்கள் (1முதல் 4 பக்கங்கள்)மற்றும் 7)DBC பணியாளர்கள் (1முதல் 10 பக்கங்கள்)ஆகியவற்றின் ஜீலை/2026 மாதத்திற்கான வருகை பதிவேட்டை நகல் எடுத்து கைப்பற்றப்பட்டது. வருவாய் பிரிவில் இன்றை தினம் 03.07.2026 ஆம்தேதி வருவாய் பிரிவில் உள்ள பில் கவுண்டர் கலெக்சன் தொடர்பான விவரங்கள் கேட்டபோது, மொத்தம் 149 பில்கள் போடப்பட்டுள்ளன. அதன்படி ரூ.1,89,286/- பணமாக வசூல் செய்யப்பட்டுள்ளதாக உள்ளது.

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

ரூ.2,750/- கார்டு மூலம் பேமன்ட் செலுத்தப்பட்டுள்ளதால், அது நேரடியாக நகராட்சி வங்கி கணக்கில் கிரிடிட் ஆகிவிட்டது. ஆக மொத்தம் ரூ.1,92,036/- அதற்கான பில்கள் விவரம் மற்றும் BRVAbstract print out (1 முதல்34 பக்கங்கள்). கலெக்சன் கவுன்டரில் இருந்த பணம் ரூ.19,227/- இருந்தது. மீதம் தொகை ரூ.1.70,059/- (ரூ.1,89,286/- (-) ரூ.19,227/-) குறைவாக உள்ளது குறித்து விளக்கம் கேட்டபோது, வருவாய் ஆய்வாளர் திரு.நரசிம்மன் அவர்கள் ஒவ்வொரு பில் கலெக்டருக்கும் டார்கெட் கொடுக்கப்பட்டுள்ளதால், அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஏரியாவில் வரி செலுத்தவேண்டிய நபர்களின் பெயரில் பில் போட்டுள்ளார்கள் என்றும், அந்த பில்லை உரியவரிடம் கொடுத்துவிட்டு வரி பணத்தை கலெக்சன் செய்து, வங்கியில் செலுத்துவதற்குள் கொடுத்துவிடுவார்கள் என்றும் தெரிவித்தார். நகராட்சி ஆணையர் அவர்களும் அதே விளக்கத்தினை தெரிவித்தார்.மேலும் 02.07.2026 ஆம்தேதிக்கான வருவாய் பிரிவில் உள்ள பில் கவுண்டர் கலெக்சன் தொடர்பான விவரங்கள் கேட்டபோது, மொத்தம் 210 பில்கள் போடப்பட்டுள்ளன. அதன்படி ரூ.2,57,809/-,அதில் ரூ.2,41,583/- பணமாக வசூல் செய்யப்பட்டுள்ளதாக உள்ளது. ரூ.16,226/- கார்டு மூலம் பேமன்ட் செலுத்தப்பட்டுள்ளதால், அது நேரடியாக நகராட்சி வங்கி கணக்கில் கிரிடிட் ஆகிவிட்டது. அதற்கான பில்கள் விவரம் மற்றும் BRV Abstract print out (1 முதல் 40 பக்கங்கள்). 02.07.2026 ஆம்தேதிக்கான Collection தொகை ரூ.2,41,583/- BRV abstract-ன்படி இந்தியன் வங்கி கணக்கின்படி A/C.517704262 & A/c.No.611727223 மற்றும் City Union Bank A/c.No.500101012717022 ஆகியவற்றில் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கான Revenue Fund Chitta பதிவேட்டின் 02.07.2027 ஆம்தேதிக்கான நகல் வங்கி செலான்கள் மூன்று பிரிண்ட் (பக்கம் 1 முதல் 10 பக்கங்கள்) எடுத்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. கைப்பற்ற ஆவணங்கள் அனைத்திலும், நகராட்சி ஆணையர், துணைக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் நானும் கையொப்பம் செய்தோம்.சோதனையின்போது நகராட்சி அலுவலகத்தில் திரு.துரைராஜ் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் லஞ்சமாக பெறப்பட்ட பணம் என கருத போதிய முகாந்திரம் இருந்ததால் அந்த தொகை **ரூ.67,000/-** வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் வருவாய் பிரிவில் உரிய நபர்களிடமிருந்து வரி

(Content of the FIR in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 continuous)

வசூல் செய்யப்படாமலே பில்கள் போடப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.இந்த திடீர் கூட்டாய்வின்போது எடுக்கப்பட்ட பொருட்கள் அந்தந்த இடத்திலேயே வைக்கப்பட்டும். அலுவலகத்திற்கும். அலுவலகத்திலிருந்த கோப்புகள் மற்றும் பொருட்களுக்கும் எந்தவித சேதாரம் இன்றி சோதனை செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட திடீர் இருத்துறை கூட்டுத்தணிக்கையை ஒரு திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையாக விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன்தட்டச்சு செய்யப்பட்டது.இந்த திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையானது, இன்று 03.07.2026-ஆம் தேதி மாலை சுமார் 16.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு சுமார் 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. அதில் 1) திரு.R.ஜெயக்குமார், காவல் துணை கண்காணிப்பாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர். 2)திருமதி.S.மாலா,காவல் ஆய்வாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பப் பிரிவு, திருவள்ளூர். 3)B.கன்னியப்பன், வயது-41 ,த/பெ. பாலகிருஷ்ணன்,திருத்தணி நகராட்சி ஆணையர், திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம். 4)திரு.C.மணிகண்டன், துணை வட்டாட்சியர் (தேர்தல்), வட்டாட்சியர் அலுவலகம், திருத்தணி, திருவள்ளூர்/மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), திருவள்ளூர். 5)திரு.S.துரைராஜ், த/பெ.சுப்பிரமணி, 6) திரு, S.தினேஷ்குமார், த/பெ. குருமூர்த்தி, 7) திரு.நரசிம்மமன், வருவாய் ஆய்வாளர் 8)திரு,M,செல்வகுமார், மேனஜர், மற்றும் 9) திரு.நாகராஜன், பணிமேற்பார்வையாளர் ஆகியோர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள்.

Honoured Madam,

I received the above complaint and proceedings and Registered a case in Thiruvallur V&AC Cr.No.09/AC/2026/TVL u/s 7 (a), 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 04.07.2026 at about 15.00hrs.

The original FIR, Complaint along with the Joint Surprise check proceddings of Zonal Deputy Tahsildar (Election), Tirutani Tk, I/c District Deputy inspection cell officer, Thiruvallur District, seized un-explained amount of Rs.67,000/- and other enclosed documents are submitted before the Hon'ble Principal District and Sessions Judge, Thiruvallur and other copies are forwarded to Superior Officers.

04/07/2026

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.